# PEACE MARCH

UNIVERSITY OF JAFFNA ... LIBRARY

More than 60 organizations participated in the peace march organized by the people's Council for Peace and Goodwill on Saturday, March 25th. The procession in which more than ten thousand people participated, started in front of the Nallur Temple at 9.00 a. m. The march proceeded along Temple Road and Main Street and reached the Esplanade at about 11.00 a. m. On the way copies of memorandum were handed over to the resident representatives of UNHCR, and ICRC.

Slogans such as, "Stop the War", "We want Peace", and "Establish peace with third party media-tion" were shouted. People expressed the desire that this bloody war which claimed many lives, wounded and maimed many more and internally displaced almost all should be stopped forthwith. This war, if continued, will not bring victory to any party, but rather bring destruction to those in the North as well as in the South.

Bishop Thomas Soundaranayagam of the Roman Catholic Church, Prelate of Nallai Atheenam, Ms. Thangamma Appakutty of Thurkai Amman Temple, President of the Hindu Priests Organization, Former Jaffna MMC, Mr M S Hameed, and Sri Naga-Vigarathipathy, Ven Gnanaratna Thero addressed the public meeting presided by Mr C. R. Arumainayagam, one of the Vice Presidents of People's Council for Peace and Goodwill. The message sent by Bishop S. Jebanesan was read at the meeting. A memorandum to Her Excellency Madam President Chandrika Ban-daranayaki Kumarathunga was read in English and in Tamil. The memorandum was handed over to the G A. Jaffna.


# THE MORNING STAR

Registered as a Newspaper (Established 1841) published Every Friday

Vol 160 Jaffna Friday 07th, April 2000 No. 07

*RICHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE*


### *A. Jeyarajan In India*

Mr A Jeyarajan Primary School Supervisor, Jaffna College, has been granted a scholarship to follow a course in Computer Studies He will be in India for one year.

## Blessed with a Baby Boy

Dr. & Mrs. Dhayalan Ambalavar wrere blessed with a baby boy on Friday 24th March.

## End War - Catholic Bishops

Bishops of Jaffna and Mannar of the Roman Catholic Church have requested the warring parties to stop the war, which has brought immeasurable hardships to the masses, forthwith.

## PA & UNP at talks

The ruling Peoples' Alliance and the Opposition United National Party are engaged in a series of meetings on constitutional reforms 'It is a good sign that the two major parties have agreed to reach a consensus before any devolution package is presented' - some observers feel. All these years when one party tried to solve the ethnic problems the other thwarted it. This indicates that, both parties have felt that this national issue should be solved by a national government comprising of all political parties. If the aspirations of all minority groups are taken into account, then the ethnic crisis can be solved eventually.

## 102nd Birth Anniversary of Thanthai Selva

A Service of thanksgiving for the life and work of Late Mr. S J. V. Selvanayagam (Thanthai Selva) was held at St John's Church Chundikuli on March 31st at 4 30 p. m. Mr. S Sahayaseelan, Lecturer in Political Science, paid the tribute and The Rev Fr. Dr. Justin Gnanpragasam, Principal St Henry's College, Illavalai, preached the sermon.

## G. C. E. O/L Results

The results of G C. E O/L Examinations held in December 1999 are released on 5 - 4 - 2000. Jaffna College Students fared well.

3 got 10 Distinction Passes
1 got 9 " "
3 got 8 " "

## School Uniforms

Free Uniform materials for the School Children are being issued now.

## Message From Robert Porter

Dear People in Vddukoddai,
I am amazed to have heard from Noel Suresh so quickly by e-mail and now hope you will hear from me quickly the same way. What is happening with the succession of the principals? I seem to remember that today, our 22nd of February, was to be the Grand Installation of A. A. Paul. I hear from R. Rajmohan now and then about his Jaffna College website and from Milroy Paul about his talk last week about the JDCSI and the American Ceylon Mission at his Lutheran (!) church.

My brother-in law's sister, Ghris Jensen, is now teaching counselling in the education department of the Seattle University.

My own sister retires next week from her many years with the University of Washington library system, most recently Head of Acquisitions.

And the church where I sing has just had its February Frolic at Fort Flagler, now a state park, situated beautifully on an island Promontory over looking the Straits of Juan de Fuca and a gorgeous view of Mt. Baker, our other huge volcanic peak, now totally white with snow.

Greetings to all, Bob

## Bharathanatyam Recital

### BY

### *Dr. SONI MARCUS*

A Bharathanatyam performance was given by Dr. Soni Marcus on 5 February, 2000 at the Norman Rothstein Theater in the Jewish Community Center, Vancouver. The function was organized by the Thamil Cultural Society of British Columbia to raise funds in aid of the Children's Hospital in Vancouver.

A medical doctor by profession, Dr. Soni Marcus received early training in Bharathanatyam when she was just seven years old under the tutelage of Kalaimamani "Vazhuvoor" Sri R Samraj. Later she took advanced training under Natyakalabooshani Kalaimamani Srimathi Ranganayaki Jeyaraman. The audience were treated to an exposition of Bharanatyam in the unique Vazhuvoor style in a traditional manner. The hand gestures and the rhythms of her foot steps wore a typical Vazhuvoor pattern. Her poise and movements were graceful and elegant.

Dr. Soni impressed the audience with the very first piece, the Pushpanjali which laid the foundation of her skills and poise.

The most striking piece in the concert was the Varnam. the most important and the biggest number. The Abhinayam during the Varnam was meticulous and the bhava she exhibited to explain the meanings of Thamil piece she chose bore excellent testimony to her proficiency knowledge in this form of dancing. After a small Padam in a popular style, Dr. Soni ended the concert with a Thillana in which she demonstrated intricate and fast movements, an expression of pleasure through nritta. The taped musical accompaniments were by outstanding musicians well known in the field.

At the outset Dr. Soni indicated that she was dedicating the concert to the memory of her father who passed away a little while back. Her husband, Mr Marcus is a

(Contd to Page 4)

## Bishop's Sermon

We Understand that our Bishop's sermon will be broad cast over SLBC's Tamil Service on Good Friday 21 - 04 - 2000. The program will include "Meditations on the cross" and songs.

எஸ். ஜே. எழுதுவது

# வன்னி நினைவுகள்

மார்ச் மாதம் 24 ம் திகதி அதிகாலை 5 மணிக்கு வன்னிக்கு புறப்படுகிறவர்கள் கொழும்பு குருமனையில் ஒன்று சேர்ந்து விட்டனர். பேராயர் ஜெபநேசன் வண. பொ. நவேந்திர அனுகூலன் திரு சுரேஸ் தம்பு, திரு S இரத்தினவேல், வண E P சொலமன் வண A ஜெயக்குமார் அகியோர் வன்னிக்கு புறப்பட ஆயத்தமாயினர். இரண்டு வாகனங்களில் நிவாரணப் பொருட்கள் நிறைகின்றன. ஒரு வாகனம் வண A ஜெயக்குமாரினுடையது. மற்றயது 'மாமா' என்று எல்லோரினாலும் அழைக்கப்படும் திரு முனியாண்டி அவர்களுடையது வழக்கம் போல் வண அனுகூலனுடைய பிரார்த்தனை, பேராயருடைய ஆசீர்வாதம் என்பனவற்றை தொடர்ந்து வாகனங்கள் இரண்டும் வடக்கு நோக்கிப் பறந்தன.

அம்பே புஸ்சா தாண்டி விட்டோம்: நன்றாக விடிந்து விட்டது! சாரதி மாமா(முனியாண்டி) பேராயர் ஜெபநேசனுக்கு ஏதோ சுவராசியமான விடயத்தை கூறுவதற்கு திரும்பினார். முன்னால் ஓர் நீல நிற வான் சடுதியாக நிறுத்தப்பட்டதை அவர் காண வில்லை, நீல நிறவான் மீது மாமாவின் வான் முட்டிக் கொண்டது.

தவறு எங்கள் மீது என அறிந்த, அந்த நீல வானில் இருந்த சிங்கள ட்ரைவர் ரூ 5000/ தந்தால் சரி என்று கூறினார். வண A ஜெயக்குமார் அதற்கு 500/ கூட செலவாகாது எனக் குறிப்பிட்டார். பிறகு நமக்கு தெரிந்த சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் அந்த ட்ரைவரோடும் வானில் இருந்த பிரயாணிகளுடனும் பேசி 2000/ ரூபாவை ட்ரைவரின் கையில் திணித்து விட்டு எமது பயணத்தைத் தொடர்ந்தோம். நாம் இவ்வாறு பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டிருந்த போது இரண்டு பொலிஸ்காரர் அவ் வழியே வந்தனர். அவர்கள் எங்களைப் பார்த்து. நீங்கள் விருப்பமானால் ஒப்பந்தம் செய்து கொண்டு போங்கள். இல்லாவிட்டால் பொலிஸ் ஸ்ரேசனுக்கு வந்து பதிவுகளை செய்து விட்டுப் போங்கள் என்றனர். வழமை போல் ஒரு நகரில் காலை உணவு! அன்றைய நாளின் தினசரி பத்திரிகைகள் வாங்கப்பட்டன. மதவாச்சியில் வாகனங்களுக்கு டீசல் நிரப்பப்பட்டன. சரியாக 12 மணிக்கு வவுனியா சென்றடைந்தோம். இன்னும் சில நிமிடத்தில் வன்னிப் பிரதேசத்திற்குள் வண்டித்தொடர் புறப்பட போகிறது என்றார்கள். எனவே வவுனியா குருமனைக்கு செல்லாமலேயே நம்பியா விட்டிலிருந்தே (இராணுவசோதனைச் சாவடி) புறப்பட வேண்டும் எனக் கூறப்பட்டது. வண A ஜெயச்சந்திரன், வண கே ஜே யோசப் ஆகியோருடைய மோட்டார் சைக்கிள்களில் ஏறி வவுனியாவில் நாம் செய்ய வேண்டிய பணிகளைத் தொடர்ந்தோம். சாந்தி இல்லத்தில் புதிய தொழிற் பயிற்சி நிலையம் ஆரம்பிப்பதற்கு பசர்வாங்க வேளைகள் செய்யப்பட்டன.

நம்பியா சோதனைச் சாவடியில் சோதனைகள் கடுமையாக இருக்கவில்லை. மேலெழுந்த வாரியாக எங்களைப் பரிசோதித்தனர். மத குருமார்கள் என்று எமக்கு வேண்டிய மதிப்பைக் கொடுத்தார்கள்

சரியாக பி ப 1 30 மணிக்கு தொடர் வண்டிகள் மடு நோக்கி புறப்பட்டன. ஒரு மணி நேரத்தில் மடுவை அண்டிய இராணுவச் சோதனைச் சாவடிக்கு வாகனங்கள் வந்து விட்டன ஒவ்வொரு வாகனங்களாக சோதனை! ஆவணங்கள் அடையாள அட்டைகள் நுணுக்கமாக ஆராயப்பட்டன. அச் சோதனைச் சாவடிக்கு அருகாமையில் பொது மக்கள் வந்து போகும் பேருந்து நிலையம் காணப்பட்டது. பொது மக்கள் பெரும் சுமையுடன் வவுனியாவில் இருந்து வந்து சோதனைகளைத் தாண்டி கால் நடையாக இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்தின் பேருந்து நிலையத்திற்கு தமது பொருட்களை கொண்டு சென்றனர். சிலர் 100 kg எடையான பொருட்களை தமது தலைகளிலும் கைகளிலும் வைத்துக் கொண்டு நடந்தனர்.

இராணுவக் கட்டுப்பாடுள்ள பிரதேசத்துக்குள் நாம் சென்றவுடன் எமக்கு அப்பிரதேசத்தின் பொறுப்பாளர்களினால் அனுமதி வழங்கப்பட்டது. எல்லோரும் ஏப்ரல் மாதம் 7 ம் திகதிய திரும்புகிறோம் என்று அறிவித்தோம். அங்கிருந்து புறப்பட்டபோது பெரும் இடிமுழக்கத்துடன் மழை பெய்ய ஆரம்பித்தது. இடிமுழக்க சத்தத்தை கேட்டவுடன் சாரதி மாமா ஷெல் அடிக்கிறார் என்று எண்ணிக்கொண்டு ஓடத் தொடங்கினார். மற்றவர்களுக்கு இடி தங்கள்மேல் விழ்ந்து விடுமோ என்று பயமாக இருந்தது. ஆனால் சிறிது நேரத்தில் எல்லாம் ஓய்ந்தன.

மடுவுக்கூடாக நாம் சென்ற போது அங்கு பெருந்தொகையான மக்கள் கூடார வாசிகளாக இருப்பதைக்கண்டோம். விடத்தல் தீவினை சென்றடைய 5.00 மணியாகி விட்டது ஒரு தேநீர் கடையில் எல்லோருக்குமான தேநீர் என்பனவற்றை திரு. இரத்தினவேல் ஒழுங்கு செய்தார். அந்தக்கடையில் வேறொன்றும் இருக்கவில்லை. தெருக்கள் பலகாலமாக செப்பனிடாத படியால் கடலில் தோணிகள் செல்வதனைப் போல வாகனங்கள் அசைந்தாடிக் கொண்டு சென்றன. சில இடங்களில் தண்ணீர் ஆழத்தைப் பார்த்து வாகனத்தை செலுத்த வேண்டியதாயிற்று ஒரு நரி வீதிக்குறுக்காக உங்களுக்கு என்ன அவசரம் என்னும் பாங்கில் வாகனத்திற்கு முன்பாக மிகவும் மெதுவாக நடந்து தெருவைக் கடந்தது.

ஜெயபுரம் நெருங்கிய சமயத்தில் இரண்டு வாலிபர்கள் வாகனத்தை மறிதது யானை! யானை! நிற்கின்றது என்றனர். ஆனால் திரு இரத்தினவேல் உந்த காட்டுக்குள் யானை இல்லை போங்கள் என்றார். பிரயாணம் முழுவதிலும் வாகனங்கள் ஒரு பிரச்சினையும் கொடுக்க வில்லை ஜெயபுரத்தை அடைந்த பின்னர் தான் ஒரு வாகனத்தின் ஒரு சில்லுக்கு காற்று போய் விட்டது என்ற வதந்தி பரவியது.

ஜெயபுரத்திலுள்ள கனிஷ்ட இறையியல் கல்லூரியில் வண ஈ பி சொலமனும், வண A ஜெயக்குமாரனும் தங்கி விட்டனர். மற்றையவர்கள் வன்னேரிக்குளத்தில் உள்ள திரு எஸ் இரத்தினவேல் அவர்களின் காரியாலயத்தில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சாயங்காலமும் விடியற்காலமும் ஆகி இரண்டாம் நாள் ஆகிற்று.

## சுவிசேஷடப்பணி குறித்த நாடகம்

### ஓர் கண்ணோட்டம்

18 - 03 - 2000 மாலை 3 30 மணிக்கு மருதனார் மடத்தில் அமைந்துள்ள ஆச்சிரம வளாகத்தில் பெரியண்ணன் மண்டபத்தில் இறையியல் கல்லூரி குருத்துவ மாணவர்களால் டாக்டர் சத்தியர் என்ற சுவிசேஷ சமூக நாடகம் ஒன்று மேடையேறியது

மண்டபம் நிறைந்து வழியும் வண்ணம் இரசிகர்கள் கூடியிருந்தனர். இந்நாடகத்தைத் தயாரித்தவரும். நெறிப்படுத்தியவரும், இறையியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளருமான அருட்திரு வீ. ந. தர்மகுலசிங்கம் டாக்டர் பாத்திர மேற்று வியத்தக்கவாறு நடித்தார். ஏனைய குருத்துவ மாணவர்கள் ஏனைய பாத்திரங்கள் ஏற்றனர். இன்பியலும் துன்பியலும் நகைச் சுவையும் கலந்த இந்நாடகம் ரசிகர் உள்ளங்களைத் தொட்டதை அவதானிக்க முடிந்தது.

வழிப்போக்கர் இருவர் தமது நடிப்பினால் சபையைக் கவர்ந்தனர். நண்பர் மூவரும் சோகம், விரக்தி, பரிதாபம், இரக்கம், போன்ற உணர்வுகளை நடிப்பு மூலம் நன்கு படம் பிடித்து காட்டினர். பெண்களாக நடித்த தாதி டாக்டர் பாத்திரங்கள் - ஆண்களாக இருந்தும் தம்மை மறந்து பெண்மை இயல்புடன் ஒன்றித்து நடாத்தியது பாராட்டற்குரியது.

இந்த நாடகத்தின் நோக்கமே சுவிசேஷடப்பணியாகும். தமது இலக்கை தவறவிடாது ஒவ்வொரு காட்சியிலும், கதாபாத்திரத்திலும் அழகாக எடுத்துக் காட்டப்பட்டமை பாராட்டற்குரியது. மரணம் நிச்சயிக்கப்பட்டது ஆயினும் எமது குறுகிய வாழ்க்கைச் சக்கரத்துள் நாம் மயங்கி, பாதை தவறி விடாது சமூகத்திற்கு நன்மைகளைச் செய்வது அவசியமாகிறது என்ற மையக் கருத்து நாடகம் முழுவதும் இழையோடியது. துன்பத்தைக்கண்டு பயந்து அழுவதால் பயனில்லை என்பதை யோசேப்பிற்கு நடித்த சகோதரன் துரை தமது நடிப்பிற்கூடாகக் காட்டினார் சைமனாக நடித்த சகோ ரூபன் துன்பத்தைத் தாங்க முடியாத மனித இயல்பை காட்டினார். அன்ரனாக நடித்த சகோ. நோகான் துயரத்தைத் தாங்காது மனிதன் நாடும் 'குடி' வாழ்க்கையை அப்படியே பிரதிபலித்தார்

வழிப்போக்கரான சகோ. லிங்கேஸ்வரனும், சகோ: செல்வநாதவும், சபையாரை மிகச் சிறந்த பாத்திரங்களோடு நாடகத்தை உச்சநிலைக்கு இழுத்துச் சென்று விட்டனர். அவர்களுக்கு என் பாராட்டுக்கள். சிறப்பாக இந் நாடகத்தைச் சிறப்பித்த பின்னனி இசையையே வாத்தியங்களையோ குறிப்பிடாமல் இருக்க முடியாது. தனக்கேயுரிய வயலின் வாத்தியத்தால் செல்வி கிளேரா அருளானந்தம் சபையைக் கவர்ந்தார். அவருக்குத் துணையாக பானுரேகா, சகோ. டானியல் வாத்தியங்களை இசைத்தனர். இல்லப்பிள்ளைகள் நாடக உணர்வு நிலைகளுக்கேற்ப இசைத்தனர்.

ஒரு மணித்தியாலமாக தமது நாடகத்தினூடாக சபையை மெய்மறக்கச் செய்த நடிகர்களுக்கு என் பாராட்டுக்கள். சிறப்பாக இதனைத் தயாரித்து நெறியாள்கை செய்து டாக்டராக நடித்த போதகர் அருட்திரு தர்மகுலசிங்கத்திற்கு பாராட்டும் நன்றியும் உரித்தாகட்டும். நாடகம் என்ற கருவியூடாக எத்தனைபேர் மனித உள்ளங்களை ஆதாயப்படுத்திய பெருமை இந் நாடகத்திற்குரியது. இதுவே சுவிசேஷப்பணியின் அடிநாதமாகும் இந்நாடகப் பணி மென்மேலும் வளர வேண்டும் மென வாழ்த்து கின்றேன்.

-திருமதி கிருபா பவசிங்கம்

## பேராயர் நினைவு நூல் வெளியீடு

''பரம தரிசனத்திற்குக் கீழ்ப்படிதல்'' என்ற பேராயர் அம்பலவாணருடைய நினைவு நூல் சென்ற செவ்வாய்க்கிழமை 14 - 03 - 2000 கொழும்பில் நடைபெற்றது. திருச்சபை இல்லத்தில் மாலை 6. 00 மணிக்கு ஆரம்பமான இவ் வெளியீட்டு விழாவிற்கு திருமதி வசந்தி இராஜரட்ணம் தலைமை தாங்கினார். பேராயர் கலாநிதி எஸ் ஜெபநேசன் அவர்களின் ஜெபத்துடன் கூட்டம் ஆரம்பமானது இலங்கை மெதடிஸ்த திருச்சபை தலைவர் வண டியூலிப் பெர்னாந்து அவர்கள் ''அம்பலவாணர் நினைவு'' எனும் பொருளில் அருமையாக பேசினார் பப்டிஸ்ட் திருச்சபையைச் சேர்ந்தவரும் பேராயர் அம்பலவாணருடைய ஆசிரியருமாக விருந்த வண டாக்டர். விக்ரமசிங்க பேராயர் அம்பலவாணர் மாணவனாகவும், ஆசிரியராகவும் ஏற்படுத்திய சாதனைகளை விளக்கினார். திரு தர்ஷன் அம்பலவாணர் நன்றி தெரிவித்து பேசினார். பேராயர் ஜெபநேசனின் ஆசீர்வாதத்துடன் கூட்டம் இனிதே முடிவுற்றது. இக் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரும் தேனீர் விருந்தில் கலந்து கொண்டனர். ''பரம தரிசனத்திற்கு கீழ்படிதல்'' எனும் நூல் ரூ. 250 க்கு விற்கப்பட்டன.

## கிராமிய பெண்கள் சங்க கூட்டம்

தென் இந்தியத் திருச்சபை யாழ் பேராயத்தின் பெண்கள் சங்கத்தின் வட்டுக்கோட்டை வட்டார கிராமிய பெண்கள் சங்க

(3ம் பக்கம் பார்க்க)

உதயதாரகை

07 - 04- 2000 3

## மீண்டும் பதற்றமா?

மறுபடியும் தமிழ்ப் பிரதேசங்களில் போர்க்கொடி பறக்கும் காலம் இது. வலிகாமம் மக்கள் 1995 ஒக்டோபர் 30 ஆம் நாள் ஏக்கப் பெருமூச்சுடன் கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு பகலோடு பகலாகவும், இரவோடு இரவாகவும் மழை கொட்டக்கொட்ட குழந்தை, கிழவன் வரை தென்மராட்சிக்கு கண்ணீர் சிந்தியவாறு ஆயிரக்கணக்கில் ஊர்ந்து ஊர்ந்து நடந்த அக்காட்சி இன்னும் எம் கண் முன் நிழலாகுகின்றது.

திரும்பவும் வன்னியில் பெரும் எடுப்புடன் மக்கள் அலைந்து திரிந்த காட்சிகள் ஒருபுறம். இந்த தபசு நாட்களில் இன்னுமோர் போர் மேகம் கருக்கட்டி விட்டது தென்மராட்சி மக்கள் இடம் பெயர ஆரம்பித்து விட்டனர் இரவு பகலாக வானம் பூமி அதிரும் வண்ணம் ஷெல் சத்தங்கள். பயணிகள் விமான சேவை மறு அறிவித்தல் வரை ரத்துச் செய்யப்பட்டதாக செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. பூநகரி, நாகதேவன் துறை, சங்குப்பிட்டிப் பகுதிகளில் பீரங்கித் தாக்குதல்கள், விமானம் வெடித்துச் சிதறிப் படையினர் பலி. ஓட்டோவில் சென்ற பெற்றோர் தமக்கு அருமையாகக் கிடைத்த பச்சைப் பாலகனை வளர்க்க முடியாது பலியான கவலை தரும் நிகழ்ச்சி இறந்து போன சடலங்கள் அடக்கம் செய்ய முடியாத அவல நிலை.

மொத்தத்தில் 1995 இல் தமிழினம் குடாநாட்டில் அடைந்த பதற்ற நிலை போல இந் நிலை தொடருமா? சமாதானப் பேச்சுக்கள், அதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கும் இச் சமயத்தில் மோதல்கள் ஆரம்பித்தமை பலருக்கு ஏமாற்றமே. இந் நிலையில் ஈழத் தமிழர்களை நாடு கடத்தாதீர்! என ஜேர்மனியில் பிராவ்பேட் நகரத்தில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது. இனப் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு சரியான, சந்தர்ப்பம் இது என யாழ் மன்னார் ஆயர்கள் இணைந்து ஜனாதிபதியிடமும் தலைவர் பிரபாகரனிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந் நிலையில் தென்னிந்தியத் திருச்சபைக்குழு அம்பன் பகுதிக்குச் சென்று இடம் பெயர்ந்த மக்களைப் பார்வையிட்டதுடன் குடத்தனை, மருதங்கேணி, நாகர் கோயில் பகுதி மக்களையும் பார்வையிட்டு ஆறுதல் கூறியது பெரும் ஆறுதலைக் கொடுக்கிறது. அம்பனில் உள்ள அமெரிக்க மிஷன் பாடசாலையில் தங்கியிருக்கும் 125 குடும்பங்களுக்கு வேண்டிய பொருட்களைக் கொடுத்துள்ளனர். சிறுவர்களுக்கு பால்மா வழங்கியுள்ளனர். இத்தகைய வேதனை நிறைந்த நேரத்தில் கத்தோலிக்க ஆயர்களும் தென்னிந்திய திருச்சபை ஆயரும் குருமாரும் செய்யும் சேவை மனித நேயம் நிறைந்தது. இத் தவக் காலத்தில் ஒவ்வொரு மனித இதயமும் மற்றவர்களின் துன்பங்களில் மனித நேயத்துடன் செயற்படுவது முக்கிய கடமையாகும்.

## வேலுப்பிள்ளை சத்தியராஜா காரைநகர்

காரைநகர் திருச்சபையைச் சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை சத்தியராஜா அவர்கள் பெப்ரவரி 15 – 2000ம் ஆண்டு கொழும்பில் அவரின் மகனின் இல்லத்தில் காலமானார். சித்தன்கேணியை பிறப்பிடமாக கொண்ட இவர் காரைநகரைச் சேர்ந்த திரு. திருமதி ஆபிரகாமின் மகளான இராணி ஆபிரகாமை திருமணம் செய்து காரைநகரிலேயே வசித்து வந்தார். இவர் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 'கட்டிட ஒப்பந்தக்காரர் ஆவார். (Building Coriractor) இவரது பிள்ளைகளான திரு பத்மநாதன், திருமதி பத்மஅருள்வதனா குணசிங்கம், அருட்திரு பத்மதயாளன் ஆகியோர் காரைநகரில் இருந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தமது கல்வியைக் கற்றனர்.

வேலை பழுவின் நிமித்தமாக திரு வேலுப்பிள்ளை சத்தியராஜா அடிக்கடி வெளியூர் சென்றாலும் அவரது மனைவியும், பிள்ளைகளும் திருச்சபை வளர்ச்சியில் ஆரம்பம் முதல் அக்கறை காட்டி வந்தனர். திருச்சபையின் அனைத்து நிகழ்வுகளிலும் முன்னின்று உழைத்தனர். திரு பத்மநாதன் யாழ் தென்னிந்திய திருச்சபையினால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது ஆதிட்சதர் பயிற்சி நெறியில் (Lay 1o training) பங்கு பற்றிச் சான்றிதழ் பெற்று திருச்சபையில் அருளுரை ஆற்றுவதற்கு அனுமதி பெற்றவர் ஆவார் இன்னும் இவர் திருச்சபையில் முழு அக்கறை காட்டுகின்றார் என்றால் அதற்கு காரணம் ஆரம்பத்தில் இவரது பெற்றோர் கொடுத்த இறைகல்வி ஆகும். திருமதி. பத்மஅருள்வதனா காரைநகர் திருச்சபையின் ஞாயிறு பாடசாலை மற்றும் வாலிபர் சங்கத்திற்கு ஊடாகவும் பாடகர் குழுவின் ஊடாகவும் திருச்சபையின் காரியங்களில் பங்கேற்றார். ஆதீனசமயக் கல்விக் குழு நடாத்திய பாடல் போட்டிகளில் கலந்து பரிசுகளையும் பெற்றுள்ளார். அருட்திரு பத்மதயாளனை சத்தியராஜா குடும்பத்தினர் இறைஊழியத்திற்காக அர்ப்பணித்து இன்று அவர் வன்னிப்பகுதியில் சிறந்த பணியாற்றி வருகின்றார். இறையியல் மாணவனாக இறையியல் கல்லூரியில் கற்ற போதே சிறப்பு மாணவன் Best academic Student என்கிற பெருமையைப் பெற்றுக்கொண்டார்.

திரு சத்தியர் (திரு வேலுப்பிள்ளை சத்தியராஜா காரைநகரில் இப்படித்தான் அழைக்கப்பட்டார்.) தனது பெயருக்கேற்ப சத்தியமாகவே வாழ்ந்தார் திருச்சபையிலும், ஆதீனத்திலும், மிகுந்த அக்கறை உடையவராக செயற்பட்டவர் 1984 ம் ஆண்டில் காரைநகர் திருச்சபையின் நிலம் மிகவும் மோசமாகப் பழுதடைந்து இருந்து அதை எடுத்து திருத்தி அமைக்க வேண்டிய கட்டாயம்; பல சிறந்த வல்லுநர்கள் அதை செப்பனிடுவதற்கு மதிப்பீட்டை வழங்கி இருந்தனர். ஆனால் திரு சத்தியர் அவர்கள் ஏனையவர்களின் மதிபீட்டுத் தொகையின் பாதிக்கும் குறைவான தொகையில் மிகவும் சிறப்பாகச் செய்து கொடுத்தார். ஆலயத்திற்கு செய்ய வேண்டியதை மிகவும் சிறப்பாக செய்ய வேண்டும் என்ற கொள்கை உடையவர். 1985 ம் ஆண்டில் காரைநகரில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்கு ஓர் வீடமைப்புத் திட்டம் காரைநகரில் சாந்திபுரத்தில் உருவாக்கப்பட்டது. இத் திட்டத்தை பல N G O க்கள் இணைந்து செய்த போதிலும் அவர்கள் காலத்தை கடத்திக் கொண்டு இருந்த காரணத்தால் அன்றைய அரசாங்க அதிபர் அதனை தென்னிந்திய திருச்சபைக்குக் கொடுத்தார். தென்னிந்திய திருச்சபையின் தொண்டு அங்கத்தவர் திரு சத்தியர் திரு இன்னாசி இருவருமாக 50 வீடுகளை 25 நாட்களில் கட்டி முடித்தார்கள்.

திருச்சபைக்கும் ஆதீனத்திற்கும் பல வகையில் உதவி செய்த திரு சத்தியராஜாவும் அவரது குடும்பமும் 1995 ம் ஆண்டிற்குப் பின்னர் (மக்கள் இடம் பெயர்வு காரணமாக) வன்னியில் ஊழியம் புரிந்த அவரின் மகனின் இல்லத்தில் தங்கி அவரது ஊழியத்திற்கு ஒத்தாசையாக இருந்தனர். தனது இறுதிக்காலத்தை தன்னுடைய மகனோடு 1999 பின்னர் கொழும்பில் கழித்த இவர் தினசரி ஆலயத்திற்குச் சென்று தியானங்களில் ஈடுபட்டு வந்தார்.

இவரது இறுதி ஆராதனை 16 -02 – 2000 கழுபோனிலையில் (கொழும்பு மலர்ச்சாலை) நடைபெற்றது- அருட்திரு நவீந்திர அனுகூலன், அருட்திரு. லோறன்ஸ் அவர்களின் உதவியுடன் ஆராதனை நடாத்தினார். திரு சவுந்தரராஜன் அவர்கள் வேதப்பாடம் வாசிக்க அருட்திரு ஜெ. ஜெயச்சந்திரன் அவர்கள் செபம் செய்தார், இரங்கலுரையை அருட்திரு அ ஜெயக்குமார் வழங்க அருட்திரு டி. எஸ். தியாகராஜா அருளுரை ஆற்றினார்.

### தென் இந்திய திருச்சபை மதகுருமாரின் நிவாரணப்பணி

தென் இந்திய திருச்சபையைச் சேர்ந்த குருமார்கள் கொண்ட குழுவொன்று அம்பன் பகுதிககுச் சென்று இடம் பெயந்து தங்கியுள்ள மக்களைப் பார்வையிட்டதுடன் அவர்களது சேமநலன்களையும் கேட்டறிந்தது அத்துடன் குடத்தனை, மருதங்கேணி, நாகர் கோயில், ஆகிய பகுதிகளுக்கும் சென்று மக்களைப் பார்வையிட்டனர். நாகர்கோயில் பகுதியில் இருந்து வெளியேற முடியாது இருந்த 6 வயோதிபர்களை அப்பகுதி இராணுவ அதிகாரியுடன் தொடர்பு கொண்டு அவரின் அனுமதியுடன் கூட்டி வந்து உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

### சந்திரிக்காவுக்கு ஆயர் கடிதம்

பனையில் சிக்கியுள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல உதவுமாறு கோரும் அவசரக் கடிதம் ஒன்றை ஆயர் வண கலாநிதி எஸ் ஜெபநேசன் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவுக்கு அனுப்பிவைத்துள்ளார். இந்தப் போரினால் மககள் ஏற்கனவே அதிகம் பாதிக்கப்பட்டு விட்டார்கள் என்றும் அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### வானொலியில் பேராயர் உரை

நமது பேராயரின் அருளுரை இலங்கை வானொலி தமிழ் பகுதியில் 21 - 04 - 2000 பெரிய வெள்ளியன்று அஞ்சல் செய்யப்படும் என தெரிகின்றது. இந் நிகழ்ச்சியில் சிலுவைத்தியானம் மற்றும் பாடல்கள் அஞ்சல் செய்யப்படும்.

### பேராயர் தலைமையில் நிவாரண உதவி

படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதியில் உள்ள மக்களுக்குப் பேராயர் அதி வண கலாநிதி எஸ் ஜெபநேசன் தலைமையிலான குழுவினரால் நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன. அக்கராயன், ஆனைவிழுந்தான், கோணாவில், சுதந்திரபுரம், மல்லாவி, விசுவமடு ஆகியபகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மககளுக்கே பொருள்கள் வழங்கப்பட்டன, உலர்உணவு உடைகள், அரிக்கன்லாம்பு, பாய், போன்றவற்றை வழங்கியதாக தெரிகிறது. இக்குழுவின் வண. A ஜெயக்குமாரன், வண E. P. சொலமன், திரு NSP தம்பு ஆகியோர் இடம் பெற்றனர்.

### ஆதீன பிரதிநிதி இந்தியா விஜயம்

மேற்படி கூட்டம் மார்ச் மாதம் 16ம் 17ம் திகதிகளில் சென்னை தென்னிந்திய திருச்சபை காரியாலயத்தில் நடைபெற்றது. இதற்கு யாழ். ஆதீனத்தின் பிரதிநிதியாக வண அ. ஜெயக்குமாரன் சென்றார் இவர் மார்ச் மாதம் 19ம் திகதி இந்தியாவில் இருந்து திரும்பினார்

### கிராமிய பெண்கள்...

கூட்டம் 8 -03-2000 பி.ப 4. 00 மணிக்கு பேராயரம்மா விமலா ஜெபநேசன் அவர்களின் தலைமையில் ஆதீன மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இக கூட்டத்தில் சமாதானக் கோட்டை, இன்பச்சோலை, தொல்புரம், மூளாய், போன்ற திருச்சபைகளில் இருந்து 30 பெண்கள் கலந்து கொண்டார்கள். இந்த கலந்துரையாடல் மிகவும பயனுள்ளதாக இருந்ததாக கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள், கூறினார்கள். மிகவும் வறிய நிலையில் உள்ள பெண்களின் சுயத்தொழில் முயற்சிக்காக மாதாந்தம் 1000 00 ரூபா கொடுத்து சுயதொழில் முயற்சியை ஊக்குவிப்பதாக தீர்மானிக்கப்பட்டது

## Federalism - Vision of Thanthai

Thanthai Selva was called Gandhi of Eelam because of his of commitment to the liberation of Tamils in Srilanka. Though the Sinhalese got their independence from foreign domain- for which Thanthai Selva was happy - he felt that Tamils had not got their independence. Only on the day Tamils win all their birth rights will the Tamils gain independence. His vision was that, the Tamils and Sinhalese could live in peace and harmony under a Federal from of government.

Federalism doesn't mean division of the country. Rather, it is a unifying force - the force which unites people of different ethnicity (and religion) Federalism is sharing of power. Only when people of different ethnic groups share power can a nation be built. When power is shared, all people will happily join in the development process, because of a sense of belonging As long as a section of the society is oppressed, their co-operation cannot be expected.

Many fear that federalism will eventually lead to separation. This fear is unfounded. In fact, countries like The United States of America, where much power is vested in the State Govermments, people very rarely think of separation. It is a country where The National Flag is most respected. People there take pride in identifying them selves as Americans and not by the states they live in.

In a federal form of goverament there is devolution of power. People participate in the government of the nation through their elected leaders who enact the legislation. There is meaningful autonomy with which people of a region - province or state rule themselves. These self - governing units come together at national level and share power. Because of this sharing of power they become more patriotic and actively involve themselves in nation building and the result is "unity in diversity".

Federalism is the most viable form of government for a multicultural country like Sri Lanka. Unfortunately, some think that only they have exclusive claims for nationhood. On the contrary, no ethnic group or religious group can claim exclusive rights because the Sri Lankan Society is a multicultural society Even England, which once belonged only to English has now begun to recognize the multi cultural nature of its society. In the United States no person can be discriminated on the basis of race, religion, or sex. Why cannot Srilanka think in those lines?

## Uspg's Tercentenary Celebrations During the year 2001

Many parishes, dioceses and churches overseas will join in thes celebrations with locally organised events and services to take place at an appropriate time during the year 2001.

The Principal components of the celebrations within British islands will be:-

An updated history of the Society and its role in God's mission - this is now with the printers and will be published world - wide in December 2000.

The "birthday" service of celebration will be held at St Paul's Cathedral on 15th June 2001. The year will start with an Epiphany service at Lichfield Cathedral (our founder's diocese) and end at York Mi ster during St Andrew's tide. Other services are planned at many cathedrals in these islands throughout the year.

A pilgrimage will take place over three weeks linking Sheldon, the parish of the founder Dr. Thomas Bray, near Birmingham, and London, ending at St Paul's Cathedral in time for the birthday service.

Exhibition material is being prepared to include the latest CD ROM iteractive technology to illustrate the work of the Society in partnership with the world church. Copies of the CD ROM will be available at no charge to those dioceses wishing to receive them. A "celebration" information, prayer and resource pack will also be available later this year.

A Financial Appeal will be aunched in June 2000 both in these islands and overseas, with the object of undergirding the Society's existing work of financial support in appropriate places, to which the Society is called now and in the future.

A major conference, under title "Venture Fourth" is planned for mid 2001 in the UK to bring together a group of clergy and laity from the world church and these islands to consider God's mission for the future.

## Bharathanatyam...

doctoral student at the University of Birtish Columbia. In addition to supporting his wife in her artistic endeavors and making her hair style, he was responsible for coordinating the audio - visual aspects during the concert. It is indeed fitting Dr. Soni chose a noble cause to make her debut in Vancouver and the audience were thankful to her for sharing her time and talents for a worthy cause Dr. Rathnaswami, President of the Thamil Cultural Society of B.C. thanked the artist for her noble gesture and gave a cheque to the Children's Hospital Fund.

## LIFE AND ART

Thamil Cultural Society of B C recently organized a Bharat Natyam recital by Dr. Soni Marcus in aid of B C Children's Hospital at Norman Rothstein Theatre.

Bhart Natyam is the classical dance style of Thamil Nadu, a southern state of India. being practiced for last two thousand years. The dance form consists of two components: Pure Dance (Nrutta) and Expressional Dance (Nrutya). It is performed both by men and women, has aptly been termed as a form of Yoga in recognition of its synthesis of physical energy and spiritual power. This art is thematic in content and in intention it is a spiritual experience.

Soni was a great pleasure to watch who is trained under great Gurus in India. Her deep love for this art was evident as she danced to precise movements, while maintaining the clarity thereby revealing her command over the essentials of Bharat Natyam.

The program was the great success to raise funds for B C Children's Hospital

## Artiste, Dr. Soni Marcus's Report

Dr. Soni marcus, felt very honoured to present this Bharathanatya recital on behalf of the Thamil Cultural Society of BC, in aid of the B C childrens hospital. She commented that the program was very well organised and was presented in an excellent fashion. She was pleased with the very appreciative audience who made her feel at home and comfortable through out her performance. Soni also said that she had a wonderul experiance and is looking forward to performing again for worthy charitable causes like this

## Dr. P. Rathanaswami, President, Thamil Cultural Society of BC's Report

Though the Thamil Cultural Society of B C has organized similar classical performances by renowned artists before, this is the first attempt to have such a program to raise money for a noble cause. This was possible solely due to Dr. Soni, who came up with a nice program without any financial commitment for the Society. We are encouraged by the response from the public and we hope to have many more programs like this in future.

For information about the Society's programs kindly contact Dr. Rathnaswami (604) 222 - 3550 or the web site http:/ TCSBC. tripod come / welcome html.

## 3rd Year Rememberence

*In Ever Loving Memory Of*

**Mr. Chellappah Edward Rajasingham**

( Retired Vice Principal Union College Tellippalai and once English Editor Morning Star. )

Born: 24 06 - 1912 Callad to Rest: 21 - 4 - 1997

I have finished the work, which you have given me to do.
John 17:4

Lifes truest Heroes never carve their name
On marbled columns built for their acclaim.
They build insterd a legacy that springs
From faithful service of the king of kings.
Gustofson

Fondly Rememb red by his beloved wife Ruby. daughters Vathana and Dhaya, sons - in - law Curtis and Hastings and Grand Children, Ramesh Rohina, Rhoda and Anjelo and Brother Mr C A. Balasingham and sister - in law Mrs Lily Balasingham

C. A. Balasingam

Registered as a News Paper at the G P. O. Sri Lanka. News Paper Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press, Diocesan Complex Vaddukoddai on Friday the of 07th April 2000 published by Rev G Nadaraja Diocesan office, Vaddukoddai.